Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 18
இதழ் 102

யாழ்ப்பாணம் வைகாசி 11 ரபி: அவ் 29 செவ்வாய்க்கிழமை (25-5-71)




# விவசாயிகள் வீடு கட்டுவதற்கு இனிமேல் ரூ. 2000 கிடைக்கும்

## குடியேற்றத் திட்டங்களை முன்னேற்ற அரசு நடவடிக்கை

கோட்டை, செவ்வாய்

**குடியேற்றத் திட்டங்களில் குடியமர்த்தப்படும் விவசாயிகள் வீடு கட்டுவதற்கு இனிமேல் அரசாங்கம் ரூபா 2000 வழங்கும்.**

விவசாய அமைச்சர் திரு. ஏச். கொப்பேகடுவ இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

குடியேற்றத் திட்டங்களில் வீடுகளை அமைப்பதற்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த 1000 ரூபா உதவி போதாமலிருப்பதாகவும், இதனாலேயே ஒவ்வொரு விவசாயிக்கும் 2000 ரூபா வழங்க முடிவு செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நீர்ப்பாசன அமைச்சு குடியேற்றத் திட்டங்களில் பாதைகளை அமைத்தல், காடுகளை துப்புரவு செய்தல் போன்ற வேலைகளை தாமதமின்றி விவசாயிகளுக்குச் செய்து கொடுக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது. இதன் மூலம் விவசாயிகள் மிகவிரைவில் பெரும்நன்மையடைவர் என நீர்ப்பாசன அமைச்சும் காணி அமைச்சும் எதிர்பார்க்கிறது.

சேதமாக்கப்பட்ட உபகரணங்களை

## தபால் இலாகாவுக்கு வழங்க பல நாடுகள் விருப்பம்

கோட்டை, செவ்வாய்

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளினால் தபால்-தந்தி இலாகாவுக்குச் சொந்தமான சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் நாசமாக்கப்பட்டுள்ளதாக தபால்-தந்தி அமைச்சர் திரு செ. குமாரசூரியர் நேற்றுத் தெரிவித்தார்.

சேதமாக்கப்பட்ட உபகரணங்கள் யாவும் இறக்குமதி செய்யப்படவேண்டியவை என்று கூறிய தபால் அமைச்சர், அந்த உபகரணங்களை தந்துதவ பல பிற நாடுகள் முன்வந்துள்ளதாகவும் அவர் சொன்னார். பிரிட்டன், ஹங்கேரி, மக்கள்சீனக்குடியரசு, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இங்கு தேவையான உபகரணங்களைத் தந்துதவ முன்வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு சிறந்த வானொலி ஒலிபரப்பு உபகரணங்களை இங்கு பொருத்துவது சம்பந்தமான பரீட்சார்த்தங்களில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பயங்கரவாதிகளினால் சேதமாக்கப்பட்ட சகல தபால் நிலையங்களும் தற்போது மீண்டும் இயங்கி வருவதாகவும், 2 நிலையங்கள் மட்டும் விரைவில் திறக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பயங்கரவாதிகளின்

## சுவரொட்டி பிரசாரத்தலைவர் 'ஜயே' பிடிபட்டார்

கோட்டை, திங்கள்

நாடு பூராவும் பயங்கரவாதிகளின் சுவரொட்டி விளம்பர பிரசாரங்களுக்குப் பொறுப்பானவராயிருந்தவரென்று கூறப்படுபவரைக் கலகெதரப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பொல்கஸவெலப் பகுதியில் நடைபெற்ற தாக்குதல்களுக்கு இவரே பொறுப்பாயிருந்ததாகவும் கூறப்படுகிறது. "ஜயே" என்று அழைக்கப்படும் இந்த நபரைக் கலகெதரப் பொலிஸார் கலபாவ பகுதியில் வைத்துப் பிடித்தார்கள்.

"ஜயே", "திலக்", 'ரஞ்சி' ஆகிய மூவரும் இன்னும் ஒருவருடன் சேர்ந்து அநுராதபுரத்தை நோக்கித் தப்பிச் சென்றுகொண்டிருக்கையில் இவர்களைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

வட கொரியத் தலைவர் கிம் இல் சுங்கின் பாணியில் தாங்கள் உடை தரித்துக்கொண்டு சண்டையிட்டதாகப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். தங்கள் இயக்கத்தின் முக்கிய தலைவர் ஒருவருடன் சேர்ந்து பிரசார வகுப்புகளை நடத்தியதாகத் திலக் ஒப்புக்கொண்டிருக்கிறார். கலபாவ முகாமில் மட்டும் 40 பேர் இருந்ததாகவும் இவர்களில் 15 பேர் பெண்களென்றும் அவர் தெரிவித்தார்.

ஒரேவிதமான சுவரொட்டிகளைப் பல இடங்களிலும் ஒட்டுவதன் மூலம் நாடு முழுவதிலும் ஒரே சமயத்தில் தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முடியுமா என்பதை அறியத் தாம் முயன்றதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிராமவாசியிடமிருந்து துப்பாக்கி ஒன்றைத் தாம் அபகரித்ததாகவும் அவர்கள் கூறியுள்ளனர். அந்தக் கிராமவாசி துப்பாக்கியைக் கொடுக்கக் கண்டிப்பாக மறுத்தபொழுது அவரது குழந்தையைத் தூக்கி மேலே பிடித்துக்கொண்டு அதனைக் கொலைசெய்யப் போவதாகப் பயமுறுத்திய தன்பேரில் கிராமவாசி துப்பாக்கியைக் கொடுத்ததாகவும் அவர்கள் சொன்னார்கள்.

குருணாகல் வட்டாரத்தில் ஹிரியலபத்து என்னுமிடத்தில் பயங்கரவாதிகள் பதுங்கியிருந்த இடங்களில் ஆயுதப்படையினர் தாக்குதல் நடத்தினர். மெல்சிரிபுர பஜாரில் கொள்ளை நடவடிக்கைகளில் ஈடுபட்டோர்கள் என்று சொல்லப்படுகின்ற இவர்களை ஆயுதப்படையினர் பரம்பரகல என்னும் இடம்வரை துரத்திச்சென்று தாக்குதல் நடத்தினர். இந்த முற்றுகையைச் சமாளிக்கமுடியாது 89 பயங்கரவாதிகள் சரணடைந்தனர். பயங்கரவாத நடவடிக்கைகள் ஆரம்பமானதிலிருந்து அவர்களுக்கு ஏற்பட்ட பெருந்தோல்வி இதுவென்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை அரச விமானப் படை வீரர்கள், சோவியத் ஜெட் விமானங்களை செலுத்துவதற்கு இப்போது நன்கு பயிற்சி பெற்றுவிட்டதாக எயர் கொமாண்டர் திரு. பி. ஏ. மென்டிஸ் தெரிவித்துள்ளார். இந்த விமானங்களை ஓட்டுவதில் பயிற்சி பெற்றபொழுது விமானிகள் மொழிப் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியிருந்ததாகவும், பயிற்சியளிக்க வந்திருந்த சோவியத் விமானிகள் சிலவேளைகளில் சைகைகள் மூலமே கருவிகளை இயக்குவதற்குச் சொல்லிக்கொடுக்க வேண்டியிருந்ததாகவும், எனவே எந்த இடையூறுகளையும் பொருட்படுத்தாமல் அவர்கள் பயிற்சி பெற்றிருப்பது ஒரு பெரிய சாதனையென்றும் திரு. மென்டிஸ் தெரிவித்தார்.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, செவ்

நேற்று அதிர்ஷ்டம்பார்க்கப்பட்ட 348வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
14 L 0994 ரூ 68,540

இரண்டாவது பரிசு
18 N 0796 ரூ. 27,416

மூன்றாவது பரிசு
03 X 0210 ரூ. 6,854

தலா ரூபா 342-70 சதம் பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 21 H 0172 | 06 G 0300 | 07 J 0709 | 05 R 0477 |
| 11 Y 0020 | 26 B 0742 | 18 C 0653 | 13 D 0332 |
| 25 F 0576 | 02 T 0998 | 24 W 0525 | 24 N 0212 |
| 02 T 0100 | 28 J 0802 | 06 K 0709 | 22 T 0842 |
| 17 H 0518 | 03 E 0702 | 22 K 0383 | 22 F 0525 |
| 09 A 0395 | 05 Y 0395 | 27 N 0370 | 02 P 0871 |
| 12 C 0967 | 23 D 0553 | 04 M 0387 | 02 K 0601 |
| 11 N 0039 | 12 B 0304 | 22 U 0959 | 13 Y 0585 |
| 10 T 0412 | 19 B 0385 | 08 K 0029 | 11 V 0663 |
| 08 S 0573 | 04 N 0677 | 11 H 0877 | 27 M 0209 |
| 20 B 0350 | 09 N 0311 | 14 B 0260 | 23 H 0298 |
| 22 G 0088 | 25 Z 0679 | 09 K 0985 | 05 K 0983 |
| 22 F 0706 | 08 V 0722 | 14 M 0402 | 23 P 0296 |
| 13 O 0284 | 18 M 0443 | 08 D 0473 | 27 O 0321 |
| 22 A 0382 | 18 L 0260 | 06 Z 0473 | 06 O 0819 |
| 13 U 0722 | 02 T 0224 | 22 U 0644 | 26 D 0553 |
| 16 N 0513 | 29 B 0891 | 24 A 0292 | 11 A 0962 |
| 33 Z 0659 | 10 H 0347 | 23 E 0585 | 14 U 0712 |
| 07 B 0023 | 26 T 0334 | 12 N 0953 | 24 R 0460 |
| 01 H 0943 | 18 T 0855 | | |
| 29 A 0252 | 07 Z 0951 | | |
| 03 V 0185 | 17 W 0818 | | |
| 13 K 0481 | 16 H 0010 | | |
| 19 H 0380 | 07 A 0641 | | |
| 19 M 0927 | 02 T 0096 | | |
| 10 G 0148 | 13 B 0432 | | |
| 24 N 0141 | 17 E 0538 | | |
| 31 S 0094 | 19 Y 0239 | | |
| 28 V 0637 | 11 D 0450 | | |
| 17 W 0488 | 01 G 0290 | | |
| 30 V 0161 | 06 T 0909 | | |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

## மேயர் காலமானார்

கொழும்பு, செவ்

தெஹிவளை - கல்கிசை மாநகர முதல்வர் திரு. எம். வி. குணரத்தின நேற்றுக் காலமானார். இவருக்கு வயது 79. இம்மாதம் 26-ம் திகதி இறுதிச்சடங்குகள் நடைபெறும்.

## புற்றுநோய்க்கு 27,000 பேர் பலி

லண்டன் மே 24

பிரிட்டனில் கடந்தவருடம் சுவாசப்பை புற்று நோயினால் சுமார் 27,000 பேர் பலியாகியுள்ளனர். மேற்கு ஜேர்மனியில் 1967-ம் ஆண்டில் சுமார் 19,000 பேர் புற்று நோயினால் மாண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### வாடகைக்கு

வீடு
மின்சார வசதியுடனும் வளவு பிரயோசனத்துடனும் நாலறைவீடு, 117, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் வாடகைக்கு உண்டு! விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும். செல்வரத்தினம் J.P. 3124

### விற்பனைக்கு

CY 2000 தொடர்பிலக்க சவர்லெற் லொறி நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. மார்க்கண்டு (மாமிகாய்), 2-ம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 2487

### தேவை

சித்திரத்தில் ஆர்வமுள்ள ஆண்கள் தேவை. யாழ் நகரசபை எல்லைக்குள் வசிப்பவரும் 18 வயதுக்கு மேற்படாதவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 5-6-71. விளம்பர இல. 3120C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3120

### விற்பனைக்கு

வவுனியா பட்டினத்தில் அழகான வீடும் விசாலமான வளவும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ச. ஸ்ரீநிவாசன், உடுவில். 2484


RAJAH — JAFFNA
Daily: 10-30a.m. 1-30&4-00p.m.
Anthony Quinn and Tonny Bill
in
THE LAST WARRIOR
(Scope&Color)

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00 பி.ப.2-00
சிவாஜி கணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப. 200 மணி
★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
★ மனோரமா
★ ரங்கராவ்
நடித்த
குமரிப் பெண்

கெப்பிட்டல்
காலை 10, பி.ப.2-00 மணி
கை கொடுத்த தெய்வம்

லிங்ஸ்லி
காலை 10, பி.ப.2-00 மணி
அன்பே வா

ஹைலன்
காலை 10, பி.ப.2-00 மணி
நேர்வழி

பிளாஸா
காலை 10, பி.ப.2-00 மணி
பாலும் பழமும்

அடுத்த வெளியீடு
முன்றெழுத்து
(வர்ணச் சித்திரம்)


பொருளாதாரத்தில்

## விவசாயிகளுக்கு முதலிடம்

கோட்டை, திங்கள்

நாட்டின் பொருளாதாரத்தில் இராமப்புற விவசாயிகளுக்கு முக்கியமான தொரு இடம் அளிக்கப்பட விருக்கிறது

இலங்கை வங்கி அதிபர்கள் சபையின் உபகுழு பொருளாதாரத்தில் விவசாயிக்கு முக்கிய இடமளிக்க வேண்டுமென சிபார்சு செய்துள்ளது. இலங்கை வங்கியின் கொள்கைகளை திருத்தியமைப்பதற்காக மேற்படி உப குழு அமைக்கப்பட்டது

விவசாய வேளாண்மை புல்வளர்த்தல் பழவகை பயிர்பண்ணல் வாசனைத் திரவியங்கள் பயிர்செய்தல் மற்றும் பல்வேறு பயிர்ச் செய்கை ஆகியவற்றிற்கு வங்கி நிதியுதவி வழங்க வேண்டுமெனவும் மேற்படி குழு சிபார்சு செய்துள்ளது

······

## 1800 உதிரிப் பாகங்கள்

கோட்டை, திங்கள்

புகையிரதப் பகுதி 1800க்கு அதிகமான உதிரிப்பாகங்கள் உள்ளூரில் உற்பத்தி செய்யத் தீர்மானித்துள்ளது.


நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 10-30, 4-30
பாரிஸ் ஐ லவ் யு
(வயது வந்தவர்களுக்கு)
PARIS I LOVE YOU
(Adults Only)

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி
காலை10-30, பி. ப. 2-30
ஜெய்சங்கர்—வாணிஸ்ரீ
நடித்த
நேர்வழி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி
காலை10-30, பி.ப.1-30
சிவாஜி-பத்மினி
நடித்த
ராஜா ராணி

REGAL (Jaffna)
Daily 10-30 a m 1-30 &
4-00 p. m
Antony Quinn
in
THE 25 th HOUR
(Spy-film)

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30 a.m, 4-30p.m
The Shadows Peggy Mount
in
FINDERS KEEPER
தினசரி பி. ப. 2-00
ஜெய்சங்கர்-கே ஆர். விஜயா
நடித்த
பெண்ணை வாழவிடுங்கள்


## கூட்டுறவு புனரமைப்பு நடவடிக்கைகள்

குருநகர், திங்கள்

கூட்டுறவு புனரமைப்பு நடவடிக்கைகள் மிக துரிதமாக நடைபெற்றுவருகின்றன. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கடைகளில் புதிய கணக்குவைப்பு முறையைக் கொண்டுவர கூட்டுறவு இலாகா அதிகாரிகள் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

இக்கணக்குமுறைகளை ஒவ்வொரு கூட்டுறவுச் சங்க மனேச்சர்களும் அறிந்து கொள்வதற்கு வசதியாக ஒவ்வொரு கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்திலும், கூட்டுறவு அதிகாரிகளாக் சங்க மனேச்சர்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள சங்கங்களின் மனேச்சர்களுக்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கூட்டுறவு கட்டிடத்திலுள்ள மண்டபத்தில் கூட்டுறவு அதிகாரிகளால் இவ்விளக்கம் கொடுக்கப்பட்டது. இதில் கூட்டுறவு மேற்பார்வையாளர் செல்வரத்தினம் கூட்டுறவு போதனாசிரியர் கோவிந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

······

அபிவிருத்தி

## நிர்வாகத்திலும் தொழிலாளர்களிலும் தங்கியுள்ளது

கோட்டை, திங்கள்

அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைகள் அரசாங்க கூட்டுஸ்தாபனங்கள் அரசாங்க சபைகள் ஆகியவற்றின் நிர்வாகத்திலும் தொழிலாளர்களிலுமே தங்கியுள்ளது.

விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் திரு ஜோர்ஜ் ராஜபக்ஸ மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

தோட்டங்களை நிர்வகிக்கத் தனிப்பட்ட நிறுவனம் உள்ளது. அதே போன்று அரசாங்கத்துறை அலுவல்களையும் கவனிக்கத் தனிப்பட்ட நிறுவனம் அமைக்க வேண்டும். இதுகுறித்து மந்திரிசபை ஆலோசனை நடத்தி வருகிறது.

ஐ. நா. தொழில் நிறுவன நிபுணரும் இக் கருத்தரங்கில் உரையாற்றினர்.

······

## காரியாலயம் திறக்கப்படும்

சுழிபுரம், திங்கள்

வட்டுக்கோட்டை கிழக்கு பயிர்ச் செய்கைக்குழுவுக்கான காரியாலய மொன்று இம்மாதம் 29ந்திகதி திறந்துவைக்கப்படவிருக்கிறது. வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் இக்காரியாலயம் திறக்கப்படும்.

## மருந்து தட்டுப்பாடு

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் இராமசபை ஆயுள்வேத வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வேண்டிய மருந்து வகைகளை உடன் அனுப்புமாறு விண்ணப்பம் அனுப்பி மாதங்கள் பலவாகியும் கொழும்பு ஆயுள்வேத நிலையத்திலிருந்து மருந்துவகைகள் இதுவரை வந்துசேரவில்லையாம்

இராமசபைத் தலைவர் திரு சு கந்தசுவாமி இது சம்பந்தமாக ஓர் அவசர தந்தியை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்

······

## 14 லட்சம் ரூபா நஷ்டம்

சேனைக்குடியிருப்பு... சோலை, திங்கள்

இம்மாதம் அவசரகால நிலைமையினால் கடல் தொழில்வளம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இம்மாதம் மீன்பிடி பகுதியில் 14லட்சம் ரூபாவை இழந்துள்ளது. தற்போது நிலைமை சீரடைந்துவருவதால் ஒவ்வொரு மாதமும் 20 லட்சம் ரூபாவிற்கு மீன் விற்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் மீன்பிடி பகுதியினால் ஆறுயிரம் ரூபா மட்டும் சேர்ந்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

······

## நல்லூர் வடக்கில் விளையாட்டுக் கழகம்

அரியாலை, திங்கள்

காலத்தை வீணாக்கக் கூடாது. காலத்தின் பெறுமதியை உணர்ந்து இளைஞர்கள் செயற்பட வேண்டும். என நல்லூர் வடக்கிலிளைஞர் விளையாட்டுக் கழகத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய திரு எஸ். கனகலிங்கம் கூறினார்.

விளையாட்டுத் துறையில் வாலிபர்கள் ஈடுபட்டு உடல் வலிமைபெற வேண்டுமென்றும் நாட்டுக்கு உழைக்க உடல் வலிமையும் மிக அவசியமென்றும் அவர் கூறினார்.

## புதிய யாப்பு

பருத்தித்துறை, திங்கள்

வடமராட்சிப் பயிர்ச்செய்கைக்குழுக்களின் சாராசம் திறம்பட இயங்கவேண்டுமென்னும் நோக்கத்துடன், ஒரு புதிய யாப்பை உருவாக்குவதற்காக, விவசாயப் பகுதி மாவட்டத் தலைவர் திரு. சோ. தி. சம்பந்தமூர்த்தி ஒரு குழுவை நியமித்துள்ளார். இக்குழு அடுத்தமாதம் 10ம் திகதி முதல் செயற்பட ஆரம்பிக்குமெனவும் அவர் அறிவிக்கிறார்.

## பிரதமர் நன்றி

சாவகச்சேரி... தாவடி, திங்கள்

அகில இலங்கை இஸ்லாமிய முற்போக்குச் சங்கம் பயங்கரவாதிகளால் நாடுற்ற துயருக்கு அனுதாபம் தெரிவித்து, பிரதமருக்கு ஒரு கடிதம் அனுப்பியதைத் தொடர்ந்து பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நன்றி தெரிவித்து கடிதமொன்றை மேற்படி சங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ளார்

······

சுழிபுரம், திங்கள்

வழக்கம்பரை சன சமூக நிலைய பஜனைச் சபையினர் சமய அறிவுப்போட்டியொன்றை நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர். போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு வழக்கம்பரை அம்மன் கோவில் தேர்த்திருவிழாவன்று பரிசுகள் வழங்கப்படும்.


இப்பொழுது திரையிடப்படுகிறது !
வின்ஸர்- யாழ்ப்பாணம்
காலை 10-30 பி. ப. 2-00
சிவாஜி கணேசன், ★ பத்மினி, ★ ஜெயலலிதா
★ நம்பியார் சுந்தரராஜன் ★ தங்கவேலு ★ மனோரமா
நடித்த
குருதட்சணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யூகோஸ்லாவியாவில்

# விமானம் விழுந்து நொறுங்கியதில் 75 பிரி. பிரயாணிகள் பலி

பெல்கிரேட், மே. 24 பிரயாணிகள் விமான மொன்றுவிழுந்துநொறுங்கியதில் 75 பிரிட்டிஷ்காரர்கள் மரணமாகியுள்ளனர்.

லண்டனிலிருந்து புறப்பட்ட இந்தப்பிரயாணிகள் விமானம் யூகோஸ்லாவியாவின் வட பகுதியில் விமான நிலையமொன்றில் இறங்க ஆயத்தம் செய்து கொண்டிருந்த பொழுது ஆகாயத்திலிருந்து நழுவி தரையில் விழுந்து வெடித்து பொசிங்கிப் போயிற்று. இதில் இருந்த 75 பிரிட்டிஷ் பிரயாணிகளும் பலியானார்களாம். ஒரே ஒரு பிரயாணியும் நான்கு சிப்பந்திகளும் மாத்திரம் உயிர்தப்பியதாகக் கூறப்படுகின்றது. 5 ஆண்டுகளுக்குமுன்பு இதே போல 98 பிரிட்டிஷ் பிரயாணிகளுடன் ஒருவிமானம் யூகோஸ்லாவியாவில் விழுந்துநொறுங்கியது. இந்தப் பிரிட்டிஷ்காரர்கள் உல்லாசமாக பொழுது போக்குவதற்காக யூகோஸ்லாவியாவுக்குப் போயிருந்தார்கள்.

## இந்தியாவந்துள்ள அகதிகள் தொகை 35 லட்சமாம்

புதுடில்லி மே 24 கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குள் குடிபெயர்ந்து வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை 35 லட்சத்தையும் கடந்துவிட்டதாம்.

இத்தகவலை இந்திய அரசு அறிவித்திருக்கின்றது. இந்த அகதிகளுக்கு மேற்கு வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் தங்குமிடங்கள் அளிக்கப்படுகின்றன. மழைக்காலம் ஆரம்பிக்கு முன்னர் இவர்களுக்கு தங்குமிடங்களை வசதியாகச் செய்து கொடுக்கப்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளுக்கு உதவும் வகையில் 5 கோடி ரூபாவுக்குக் குறைவாகவே சர்வதேச உதவி கிடைத்திருக்கின்றது என்றும் எனவே இந்தப் பாரத்தை இந்திய அரசே முழுமையாகச் சமாளிப்பதற்கு முடிவு செய்திருப்பதாகவும் மறுவாழ்வளிப்பு இலாகா அறிவித்திருக்கின்றது. கிழக்குப் பாகிஸ்தான் அகதிகள் பத்திரமாகத் தமது நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் வகையில் இந்தியா மற்ற நாடுகளைத்தொடர்ந்து ராஜதந்திர முறையில் வலியுறுத்திவரும் என்றும் அறிவிக்கப்பட்டது.

கிழக்குப்பாகிஸ்தான் அகதிகளுக்கென பெருமளவில் உதவிகள் வழங்கும்படி ஐநா பொதுச்செயலாளர் விடுத்த வேண்டுகோள் இன்னமும் சர்வதேச மனச்சாட்சியைத் தூண்டாமலிருப்பதற்காக மறுவாழ்வு வாய்ப்பு அமைச்சு ஆச்சரியம் தெரிவித்துள்ளது.

### ஆர்ஜன்டைனாவிலுள்ள

## பிரிட்டிஷ் தூதர் கடத்தப்பட்டார்!

புவனஸ் அயர்ஸ் மே 24 ஆர்ஜன்டைனாவில் ரொஸாரியோ நகரிலிருந்த பிரிட்டிஷ் கான்சல் ஜெனரல் (ராஜதந்திரி) கடத்திச்செல்லப்பட்டிருக்கிறார்.

மக்கள் புரட்சிச் சேனை என்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் பிரிட்டிஷ் தூதரைக் கடத்திச் சென்றதாகத் தெரிவித்துள்ளனர்.

ஆர்ஜன்டைனாவிலுள்ள பிரிட்டிஷ் தூதர் உள்ளூரில் தொழில் அதிபராகவும் இருந்துவருகிறார். பிரிட்டனுக்கு அவர் கௌரவ கான்சல் ஜெனரலாகக்கடமையாற்றி வந்தார். 1969-ம் ஆண்டு மரணமான புரட்சிவாதி இளைஞன் ஒருவனின் இரண்டாவது ஞாபகார்த்த தினத்தை யொட்டி இவர் கடத்தப்பட்டாராம். இவர் பொதுமக்கள் சபை யொன்றின்முன் விசாரிக்கப்படுவார் என்று புரட்சிவாதிகள் அறிவித்திருக்கிறார்கள். லத்தீன் அமெரிக்க நாடொன்றிலிருந்து பிரிட்டிஷ் தூதுவர் ஒருவர் கடத்தப்பட்டிருப்பது இது இரண்டாவது தடவையாகும். முன்பு உருகுவேயிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் ஒருவர் புரட்சிவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டார்.

## பிரிட்டனில் பிரசுரமாகும் 4500 சிறப்புச் சஞ்சிகைகள்

லண்டன், மே. 24 தொழில் நுட்பம், வர்த்தகம் சம்பந்தப்பட்ட துறைகளில் மட்டும் பிரிட்டனில் சுமார் 4,500 சிறப்புச் சஞ்சிகைகள் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. விஞ்ஞான மயமாகி வரும் சகல தொழிற்துறைகள் பற்றியும் அவற்றின் அபிவிருத்தி. செயல்முறை பற்றியும் இச்சஞ்சிகைகள் வாயிலாகப் படித்தறிந்து கொள்ளலாம்

விவசாயம். பொறியியல் போன்றவை பரந்த அளவில் வளர்ச்சிகண்டு பல்வேறு புதிய பிரிவுகளாக இன்று செயல்பட்டு வருகின்றன. நிபுணத்துவம் வாய்ந்த தனிப்பட்ட கிளைகளாக மாறி விடும் சகல புதிய துறைகள் பற்றியும் சிறப்புச் சஞ்சிகைகள் பிரிட்டனில் வெளியாகி வருகின்றன.

உதாரணமாக 'விவசாயம்' என்ற பெயரில் வெளியாகி வரும் மாதப் பத்திரிகை பிரிட்டனிலுள்ள விவசாயிகளுக்குப் பெரிதும் பயனுள்ளதாகக் கருதப்படுகிறது. அதேவேளை 'ஒட்டுயிர்கள்' எனப்படும் சஞ்சிகை இத்துறை சார்ந்த நிபுணர்கள் மத்தியில் சர்வதேச ரீதியாக வாசிக்கப்பட்டு வருகிறது. அத்துடன் 'விவசாய உபகரணங்கள்', 'பரிசோதனை விவசாயம்', 'உஷ்ணமண்டல விவசாயம்' 'உலகப் பயிர்ச் செய்கை', 'வனவியல்'. இப்படியாக விசாலமடைந்து வரும் விவசாயத் துறையில் பெருந்தொகையில் சிறப்புச் சஞ்சிகைகள் வெளியாகி வருகின்றன

### வெளிநாட்டு வாசகர் சேவை

நிபுணத்துவம் வாய்ந்த இந்தச் சிறப்புச் சஞ்சிகைகளை வெளிநாட்டு வாசகர்கள் மத்தியில் பிரபல்யப் படுத்தும் நோக்கமாக ஒரு ஸ்தாபனம் பிரிட்டனில் இயங்கி வருகிறது. 'விசேஷ பிரிட்டிஷ் சஞ்சிகைகள் சேவை' என்று அழைக்கப்படும் இந்த ஸ்தாபனம் பிரிட்டிஷ் பிரசுரிப்பாளர் சங்கத்தினதும், பிரிட்டிஷ் அரசாங்கத்தினதும் ஆதரவின் கீழ் இயங்கி வருகிறது. 1965ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த சேவை இலங்கை உட்பட சுமார் 100 நாடுகளைச் சேர்ந்த 19,000 சந்தாதாரர்களுக்கு சஞ்சிகைகளை அனுப்பி வருகிறது. தனிப்பட்ட நபர்கள் மட்டுமன்றி வர்த்தக ஸ்தாபனங்களும், தொழிற்றுறை நிறுவனங்களும் இந்தச் சஞ்சிகைகளைப் பெற்று வருகின்றன.

### மாணவர்களுக்கு

நிபுணத்துவம் வாய்ந்த துறைகளில் வெளிநாட்டு மாணவர்களுக்கென விசேஷ சஞ்சிகைகளையும் மேற்கூறிய சேவை அளித்து வருகிறது. வைத்தியத் துறையில் மட்டும் 60 சிறப்புச் சஞ்சிகைகள் ... மாகி வருகின்றன.

## சந்திரன் பூமியிலிருந்து பிரிந்ததல்ல?

ஹைடல்பேர்க், மே 24 சந்திரன், பூமியிலிருந்து பிரிந்ததல்ல என்பது ஊர்ஜிதமாகிவிட்டது. ஜேர்மன் விஞ்ஞானிகள் இதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சந்திரனில் இருந்து கொண்டுவரப்பட்ட கற்களையும் தூசியையும் ஆராய்ந்தபின்னரே இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். பூமியின் மிகப் பழைய கற்கள் சுமார் 370 கோடி ஆண்டுகள் பழமையானது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் சந்திரனிலிருந்து கொண்டுவரப்பட்ட சில கற்கள் 400-450 கோடி வருடங்கள் பழமையானவை என்று ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்திருக்கிறார்கள். எனவே தான் சந்திரன் பூமியில் இருந்து பிரிந்ததல்ல என்னும் நம்பிக்கை ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது.

அப்பலோ - 14 வீரர்கள் சந்திரனிலிருந்து கொண்டு வந்த 96 ரூதிகள் கற்கள் தூசி ஆகியவற்றில் 200 கிராம் பொருட்கள் ஜேர்மன் கூட்டாட்சிக் குடியரசிலுள்ள 'ஹைடல்பேர்க் மாக்ஸ்பிளாங்' கழகத்திற்கு கிடைக்கவிருக்கின்றன. இவற்றை ஆராயும் ஜேர்மன் விஞ்ஞானிகள் 1972 வசந்தகாலத்தில் ஹூஸ்டனிலுள்ள அமெரிக்க விண்வெளித் தளத்திற்குச் சென்று தங்களின் முடிவுகளை அறிவிப்பார்கள். மாக்ஸ் பிளாங்க் கழகம் 1955-ம் ஆண்டிலிருந்து கிரகமண்டல ஆராய்ச்சி நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

### கி. ச. வின் தீர்மானம்

உடுப்பிட்டி, திங்கள் உடுப்பிட்டி கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் உடுப்பிட்டியில் 7 குளங்களையும் கப்பூதுவில் 3 குளங்களையும் திருத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொலிகண்டியிலுள்ள பொதுக்கிணறொன்றைக் கிராமசபை பொறுப்பேற்பதெனவும் மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இக் கூட்டத்திற்குக் கிராமசபைத்தலைவர் திரு. ஆர். ஆர் தர்மரத்தினம் தலைமைவகித்தார்.

## சோவியத் அதிபர் எகிப்துக்குப்போவார்

மாஸ்கோ மே 24 சோவியத் அதிபர் நிக்கோலாய் பொட்கோர்னி இன்னும் இரண்டொரு தினங்களில் கெய்ரோவுக்கு விஜயம் செய்யவிருக்கிறார். கடந்த ஜனவரியில் அஸ்வான் அணைக்கட்டுத் திறப்புவிழாவின்போது கெய்ரோவுக்கு வந்திருந்த பொட்கோர்னி 5 மாதங்களுக்குள் இரண்டாவதுதடவையாக எகிப்துக்கு இப்பொழுது விஜயம்செய்யவிருக்கிறார்.

இம்முறை அரசியல் ரீதியில் அன்றி தனிப்பட்ட முறையிலேயே இந்த விஜயம் அமையும் என்று தெரிகின்றது.

எகிப்திய அரசாங்கத்தில் சமீபகாலத்தில்ஏற்பட்டுள்ள மாற்றங்களின் காரணமாக உருவாகியுள்ள அரசியல் நிலைமையைச் சுமுகமாக்குவதற்கு அதிபர் பொட்கோர்னி முயற்சிசெய்வார் என்று தெரிகின்றது. எகிப்திய அரசாங்கத்தில் இப்போது ஏற்பட்டுள்ள அரசியல்நெருக்கடி சமயத்தில் அதிபர் பொட்கோர்னியின் விஜயம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவிருக்கும் என்று கருதப்படுகின்றது.

## இஸ்ரேலிய தூதர் கொலை: மூவர் கைது

இஸ்தான்புல், மே.24 துருக்கியில் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட இஸ்ரேலிய தூதுவர் எல்ரோமின் கொலைசம்பந்தமாக மூன்று நபர்களை துருக்கி பொலிசார் கைது செய்திருக்கிறார்கள்,

இவர்களில் இருவர்பெண்கள் ஒருவர் ஆண்.

இஸ்ரேலிய தூதுவர் கடத்திச் செல்லப்பட்டு கட்டிவைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார். இஸ்ரேலிய தூதுவரைத் துருக்கிய மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் கடத்தி சென்றிருந்தார்கள் காவலில் வைக்கப்பட்டுள்ள தங்களின் சகாக்கள் விடுதலைச் செய்யப்பட வேண்டும் என்றும் இன்றேல் தூதுவர்கொலை செய்யப்படுவார் என்றும் அவர்கள் நிபந்தனைவிதித்திருந்தார்கள் இந்நிபந்தனையை துருக்கி அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. கடத்தல்காரர்களைக் கண்டு பிடிப்பதற்காக சுமார் 25 ஆயிரம் துருப்புகள் பயன்படுத்தப்பட்டன கொலை செய்யப்பட்ட இஸ்ரேலிய தூதுவரின் சடலம் டெல் அவிவுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது.

### கல்வியமைச்சின் யோசனை

கோண்டை, திங்கள் அரசாங்க ஊழியர்கள் சாதாரண நாட்களில் எட்டு மணித்தியாலயமும் போயாவுக்கு முதல் தினம் ஆறு மணித்தியாலயமும் வேலை செய்யவேண்டும்.

இந்த யோசனையை கல்வி அமைச்சின் தொழில் நுட்பக் கல்விப்பகுதி கடிதமூலம் பிரதமருக்கும், தீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலை அமைச்சருக்கும், புனருத்தாரணக் கமிட்டித்தலைவருக்கும் அனுப்பியுள்ளது. அத்துடன் எல்லா அரசாங்க இலாகாக்களிலும் உயர்தர உத்தியோகத்தர்களுக்கும் பதிவு ஏற்படுத்த வேண்டும் எனவும் யோசனை தெரிவித்துள்ளது.

### பாராட்டு

அரியாலை திங்கள் நல்லூரைச் சேர்ந்த செல்வன் தம்பையா விக்னேஸ்வரன் "ஆன்மீக ஒளி" என்னும் நூலில் எழுதியுள்ள கட்டுரைக்காக நல்லூர் முன்னேற்றக் கழகம் அவருக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

### 'காலம் பொன்னானது'

பருத்தித்துறை, திங்கள் "காலம் பொன்னானது என்பதை உணர்ந்து எமது இளைஞர் ஆக்கபூர்வமான வழியில் இயங்கினால் நாட்டில் அமைதிக்கும் சுபீட்சத்திற்கும் வழி பிறக்கும். கூட்டங்கூட்டமாக வீதியோரங்களில் நின்று வேடிக்கை பார்ப்பதில் காலத்தை விரயமாக்குவதால் வருங்காலச் சந்ததிக்கும் நாட்டுக்கும் நட்டமேற்படும்"

இவ்வாறு, திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக ஆதரவில் நடந்த இறுதிநாள் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடமராட்சி கிழக்குக் காரியாதிகாரி திரு. எம் தம்பிமுத்து கூறினார்.

திரு பி. ஆறுமுகம் தலைமையில் நடந்த இவ்வைபவ முடிவில் செயலாளர் தி. க. உருத்திரபாலன் நன்றி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் ஆரம்பமாவது மீண்டும் தாமதமாகுமா?

கோட்டை, திங்கள் நாட்டின் சில பகுதிகளில் ஒருவித கண்ணோய் பரவிக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டபடி ஜூன் 8-ம் திகதி சகல பாடசாலைகளும் திறக்கப்படுமா என்ற சந்தேகம் இப்பொழுது எழுந்துள்ளது.

பயங்கரவாத இயக்கங்களின் காரணமாக ஒரு மாதம் பின்போடப்பட்டிருந்த பாடசாலைகள் ஆரம்பமாகும் தினம் பற்றி ஆராய்வதற்கு நாளை தினம் கூடவிருக்கும் கல்வி இலாகாவின் பிராந்திய அதிபர்கள் இப்புதிய நிலைமை குறித்து முடிவெடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு வடக்கு போன்ற பகுதிகளில் இப்புதாரக் கண்ணோய் பெருவாரியாகக் காணப்படுகின்றது. அனேகமாக இப்படியான பகுதிகளில் பாடசாலைகளைத் திறப்பது பின்போடப்படலாம் என்று கருதப்பட்டபோதிலும் சுகாதார இலாகா அதிகாரிகள் தெரிவிக்கும் யோசனையின் படி கல்வி இலாகா நடவடிக்கைகளெடுக்கும் என்று ஓர் அதிகாரி தெரிவித்தார்.

# ‘தொழிற் கல்விக்கே எதிர்காலச் சிறப்பு’

பருத்தித்துறை, திங்கள் "நாட்டில் நெருக்கடிகளும் கொந்தளிப்பான நிலைமையும் ஏற்படாது அமைதியும் ஒழுங்கும் ஏற்படவேண்டுமாயின் புத்தகப்படிப்பிலும் பார்க்கத் தொழிற்கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். எதிர்காலத்தில் தொழிற் கல்வி சிறப்புடன் மிளிர்வதற்கான சூழல் அமைந்து வருகிறது. எனவே ஆசிரியர் தொழிற்கல்வி மகத்துவத்தை உணர்ந்து கல்வித் துறையில் மட்டுமன்றி சாதாரண வாழ்விலும் அதற்கான முக்கியத்துவத்தை அளிக்கவேண்டும்."

இவ்வாறு சாதாரண பயிற்சிபெற்ற கைப்பணி ஆசிரியர்களின் விசேட வகுப்பை ஆரம்பித்துவைத்துப்பேசியவடமாநிலபிரதம கல்வி அதிகாரி திருமதி எம். பாமர் கூறினார்.

வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இவ்வகுப்பை கலை, கைப்பணி வித்தியாதிகாரி திரு. மு. கனகசபை ஏற்பாடு செய்திருந்தார். இவ்வித வகுப்பு கோப்பாய் கிறிஸ்தவ பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

## நியமனம்

தாவடி, திங்கள் திரு. சி. சுப்பிரமணியம், திரு. க. சண்முகநாதன் ஆகியோர் முறையே பருத்தித்துறை உடுவில் வட்டாரப் பகுதிகளுக்கு நெசவுத் தொழில் மேற்பார்வையாளர்களாக அரசாங்க சிறுகைத்தொழில் இலாகாவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஆலய உற்சவம்

தாவடி, திங்கள் தாவடி அம்பலவாண வேதவிநாயகராலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 30-ந் திகதி ஆரம்பமாகிறது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். இவ்வுற்சவத்தின் தேர்த்திருவிழா ஜூன்மாதம் 7ந்திகதி நடைபெறவுள்ளது.

## இரு வீதிகளுக்கு மின்சாரம்

மாவிட்டபுரம், திங்கள் காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள் உள்ள வீதிகளுக்கு மின்சாரம் வழங்க 7000 ரூபா செலவிடப்படவுள்ளது.

காங்கேசன்துறைப் பட்டின சபைக்குட்பட்ட பல வீதிகளுக்கு மின்சாரம் வழங்க அரசாங்கம் 57 ஆயிரம் ரூபா கடனுதவி வழங்க சம்மதித்த போதிலும் பணம் இதுவரைவழங்கப்படவில்லை எனினும் பட்டினசபைத்தலைவர் திரு. இ. குருசாமி மின்சாரம் அவசரமாகத் தேவைப்படும் அரசடி வீதிக்கும் நுளம்மண்குண்டு வீதிக்கும் மின்சாரம் வழங்க 7000 ரூபா ஒதுக்கி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அரசிடம் கோரிய நிதி கிடைத்ததும் சபையின் வட்டாரத்துக்குட்பட்ட மற்றும் பல பகுதிகளுக்கும் பாரபட்சமின்றி படிப்படியாக மின்சாரம் வழங்க இருப்பதாக பட்டினசபைத் தலைவர் நமது நிருபரிடம் கூறினார்.

## கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், செவ் ராணி சினிமா தாபனத்தில் கடமையாற்றும் விவாகமானவர்களுக்கும் விவாகமாகாதவர்களுக்கும் இடையில் சிநேகபூர்வமாக நடந்த கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் விவாகமாகாதவர்கள் வெற்றியீட்டியுள்ளார்கள்.

சென்றகிழமை யாழ். நீதிமன்ற மாவிடையின் ஊழியர்களுடன் விளையாடி வெற்றியை ராணி சினிமா ஈட்டியுள்ளது.

—

## சிரமதானம்

குருநகர், திங்கள் காரைநகர் இ. போ. ச. டிப்போ அமைந்துள்ள தொழிலாளர்களின் முயற்சியால் சிரமதானமூலம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. காரைநகர் இ.போ.ச டிப்போ மேலதிகாரி ரி. தேவராசா தலைமையில் இந்த டிப்போவிக்குள்ளவர் தொழிலாளர்கள் இச்சிரமதான வேலையை நடத்தி முடித்தனர்.

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 11-ந் திகதி

25-5-71

மேஷம்- எதிர்பாராத வகையில் பொருள்வரவு ஏற்படுமாகும். கொடுக்கல்வாங்கல்களால் பிணக்குகள் ஏற்படும்.

ரிஷபம்-கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். சிலருக்கு பதவிஉயர்வும் ஏற்படலாம். வெளியிடத்தொடர்புகள் மூலம் செல்வாக்குப் பெறும்.

மிதுனம்- தனத்துடன் வாழ்வு இன்று தவறுது கிடைக்கும். சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு. வியப்பூட்டும் செய்தியும் கிடைக்கும்.

கடகம்- உஷ்ணத்தின் தாக்குதல் உடலைப் பாதிக்கும். நயனரோகத்திற்கு இடமளியாது நடந்து கொள்ளவும். சுகாதாரம் வேண்டும்.

சிம்மம்- நினைத்தகாரியத்தில் வெற்றியுண்டு. எதிர்பாராதவகையில்உங்களுக்கு ஆதரவு பெருகும். இன்று சிறப்பான தினம்.

கன்னி- அறவழிகளை மனம் நாடும். பொதுவிவகாரங்களில் ஈடுபடுவதன் மூலம் பொருட்செலவுக்கு இடமுண்டு.

துலாம்- வழக்குவிவகாரங்களின் மூலம் பணம் செலவாகும். எதிர்பாராதவிடயத்தில் தடைஏற்படலாம்.

விருச்சிகம்- களர்ச்சிகரமான தினம். காதலர்கள் இன்பத்தில் மிதப்பர். கரும்புபோல் வாழ்க்கை இனிக்கும்.

தனுசு- எதிர்பாராத முனையிலிருந்து ஆபத்து உருவாகும். உன்வீட்டிலேயே சிறிய பூசல்கள் தோன்றக்கூடும்.

மகரம்- அறவழியில் நாட்டம் பிறக்கும். புண்ணிய ஸ்தல யாத்திரையொன்று மேற்கொள்ளப்படலாம்.

கும்பம்- புதிய எண்ணங்கள் மலரும். தொழில் துறையில் முன்னேற்றமுண்டு, பொன்னுள்.

மீனம்- இலட்சியப் பாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும். எதிர்பார்த்த பொருள் வரவும் இன்று கிடைக்கலாம்.

சோதிடக்கலாநிதி
இணுவில் க. வேலுப்பிள்ளை

## திவுப் பகுதியிலிருந்து மூவர்தெரிவு

குருநகர், திங்கள் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் சேவையாற்றுவதற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்க அலுவலகங்களில் பயிற்சிபெற்று வந்த பட்டதாரிகள் இருபது பேர்களும் தீவுப்பகுதிக் காரியாதிகாரி அலுவலகத்திலிருந்து த. நாகேஸ்வரசர்மா, த. தெட்சணாமூர்த்தி அ. ஜெகதீஸ்வரன் ஆகிய மூவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

— —

ஆசிய சைக்கிள்போட்டி

## இலங்கை பங்குபற்றுகிறது

கொழும்பு, திங்கள் ஒக்டோபர் 23-ந் திகதி தொடக்கம் 30-ந் திகதிவரை சிங்கப்பூரில் நடைபெறவிருக்கும் ஐந்தாவது ஆசிய சைக்கிள் சாம்பியன் கோஷ்டி போட்டியில் கலந்துகொள்ள இலங்கையும் சைக்கிள் கோஷ்டி ஒன்றை அனுப்பவிருக்கிறது.

— —

## 20 பேர் பயிற்சி பெறுகின்றனர்

குருநகர், திங்கள் வடபகுதியில் நிலவும் பொருளாதார நெருக்கடியைக் குறைப்பதற்கும், அரசாங்கத்தால் அச்சுவேலியில் நிறுவப்பட்டுவரும் கைத்தொழிற் பேட்டையில் சேவையாற்றுவதற்கும் வடபகுதியிலுள்ள காரியாதிகாரி அலுவலகம், தொழில் அலுவலகம் ஆகியவற்றில் பயிற்சி பெற்றுவந்தபட்டதாரிகளில் 20 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு கைத்தொழிற் பேட்டையில் சேவையாற்றுவதற்கான விசேட பயிற்சியொன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றுவருகின்றது. இப்பயிற்சி வகுப்புகளை, இக்கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் ஹூவர் ஜெயசிங்கம், டாக்டர் சுந்தரலிங்கம் ஆகியோர் நடத்திவருகின்றனர்.

## அரசாங்கத்திற்கு பாராட்டு

உடுவில், திங்கள் ‘அண்மையில் நம்நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாதச் சம்பவங்களை தன்னம்பிக்கையும், துணிவும் கொண்டு, சாதுரியமான முறையில் எதிர்கொண்டு நாட்டில் ஜனநாயகத்தை பாதுகாக்கவும் ஒற்றுமையையும் சமாதானத்தையும் நிலைநாட்டவும் நமது பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா எடுத்துள்ள சகல நடவடிக்கைகளையும் பாராட்ட வேண்டும். இந்த இக்கட்டான வேளையில் நாட்டுப்பற்றும் தேசிய உணர்வும் முற்போக்குஎண்ணமும் கொண்ட நாம் பிரதமருக்கு எமது பூரணஒத்துழைப்பையும் பாராட்டையும் அளித்தல் வேண்டும்’

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உடுவில் கிளையின் மாதாந்தக் கூட்டத்தில் அரசாங்கத்தின்செயலுக்குப்பாராட்டு தெரிவிக்கும் மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மேற்படி கூட்டத்துக்கு உடுவில்கிளைத் தலைவர் திரு ஏ. கே. சுந்தரேசன் தலைமைவகித்தார். இதைவிடமேலும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## ‘நாட்டுக்கு சேவை செய்வதே ஒருவரின் கடமை’

உடுப்பிட்டி, திங்கள் ‘மக்களுக்குச் சேவை செய்வது ஒருவரின் தனிப்பட்ட ஏகபோக உரிமையல்ல மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரினதும் கடமை நாட்டுக்குச் சேவை செய்வதுதான், நாம் செய்யும் சேவை எவரையும் பாதிக்காது எல்லோரும் அதனால் பயனடையக் கூடிய விதத்தில் அமைய வேண்டும்.

நல்ல நோக்கத்துடன் எக்காரியத்திலீடுபடும் போதும் முட்டுக்கட்டைகளேற்படுவது இயற்கையே. இவற்றைப் பொருட்படுத்தாது எதிர்ப்பவர்களின் ஒத்துழைப்பையும் நாட வேண்டும்.

மேற்கண்டவாறு உடுப்பிட்டித் தமிழ் மன்றக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் டாக்டர் ஆ. திருச்சிற்றம்பலம் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

‘வாலிபர்கள் மத்தியில் பொறுப்புணர்ச்சியும், ஒற்றுமையுணர்ச்சியும், கடமையுணர்வும் அவசியம். வாலிபர்கள் சமூகப்பணியில் ஈடுபடவேண்டும், பிரதிபலன் எதிர்பாராது செயலாற்ற வேண்டும். கடமை கண்ணியம், கட்டுப்பாடு இம்மூன்றும் இன்றி எதையும் சாதிக்க முடியாது’.

## கருத்தரங்கு

பருத்தித்துறை, திங்கள் வடபகுதிப் பாடசாலை அதிபர்கள், வித்தியாதிகாரிகள் ஆகியோரைக்கொண்ட கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 27, 28ந் திகதிகளில் யாழ்ப்பாணக் கல்லூரி ஒன்றில் நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது.

பாடவிதானத்தில் புதியன புகுத்தல், மாற்றங்கள், ஜனநாயக ரீதியிலான ஆக்கபூர்வமான கல்வித் திட்டம் ஒன்றை உருவாக்குதல், மாணவர் மத்தியில் ஒழுங்கீனம், பால் கல்வி ஆகிய இன்னோரன்ன விடயங்கள் விவாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கருத்தரங்கில் கல்விப் பகுதியைச் சேர்ந்த நிரந்தரக் காரியதரிசி திரு. கே. பாஸ்கரலிங்கம், திரு. எஸ். சுபசிங்கா ஆகியோரும் கலந்துகொள்ளவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இவ்வித கருத்தரங்குகள் நாட்டின் ஏனைய பாகங்களிலும் ஏககாலத்தில் நடைபெறுமெனத் தெரிகிறது.

## ‘உலகப் பொதுநெறி’

யாழ்ப்பாணம், செவ் கவியோகி சுத்தானந்த பாரதியார் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது அவர் இயற்றிய ‘உலகப் பொதுநெறி’ என்றசிறுநூல் யாழ்ப்பாணத் திருநெல்வேலி தாபனத்தாரால் இலவசமாக வெளியிடப்பட்டுள்ளது.

## பிளாஸ்டிக் கூண்டுக்குள் வளரும் குழந்தைகள்

உல்ம், மே 24 ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் உல்ம் நகரில் இரட்டைக் குழந்தைகள் பிளாஸ்டிக் கூண்டுகளுக்குள் வளர்ந்துவருகின்றன. வேசினர், எர்வின் ஆகிய இரு குழந்தைகளும் பிறந்தது முதல் தனித்தனி பிளாஸ்டிக் கூண்டுகளுக்குள் வைக்கப்பட்டுள்ளன. இரு குழந்தைகளின் இரண்டாவது பிறந்த தினம் அண்மையில் தான் வந்தது. பெற்றோர் ஒரு துவாரத்தின் வழியாக இரு குழந்தைகளுக்கும் தமது சிறு அன்பளிப்புகளைக் கொடுத்தார்கள்.

உல்ம் பல்கலைக்கழகச் சிறுவர் மருத்துவ நிலையத்தில் ஒட்டிப்பிறந்த இரு குழந்தைகளும் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டிருக்கின்றன. இரு குழந்தைகளும் சாதாரண குழந்தைகள் போல் வளர்ந்துவருவதாகவும் ஆனால் அவை அழுவது அரிதென்றும் தாதிமார் தெரிவிக்கிறார்கள்.

## இடமாற்றம்

சுழிபுரம், திங்கள் சுழிபுரம் கிராமசபையில் லிகிதராயிருந்த திரு. எம். ஆரோக்கியநாதனின் இடமாற்றத்தைத் தொடர்ந்து அவரது இடத்திற்கு சங்கானைப் பட்டினசபையிலிருந்து திரு கே. தனபாலசிங்கம் மாற்றப்பட்டுள்ளார்.

நிலஅதிர்ச்சியில்

## இறந்தவர் தொகை 800 தானும்

இஸதான்புல், மே. 24 துருக்கியில் ஏற்பட்ட நில அதிர்ச்சியில் மரணமானவர்களின் எண்ணிக்கை 800 பேர் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. செஞ்சிலுவைச் சங்கத்தினர் 1000 பேர் வரை பலியாகியிருக்க வேண்டுமென அறிவித்துள்ளனர். இடிபாடுகளில் சிக்கியிருக்கும் சடலங்களும் மீட்கப்பட்டால் இறந்தவர்எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

## பூசாரியிடம் அகப்பட்டான்

குருநகர், திங்கள் காரைநகர் பலுகாடு ஸ்ரீநாகேஸ்வரி அம்மன் கோவிலில்இருந்தஉண்டியல் பணத்தையும் கோவிலில் இருந்த தங்கப்பொருள்கள் சிலவற்றையும் இரவு நேரத்தில் திருடிய திருடன் ஒருவன் அதிகாலையில் கோவிலை விட்டுவெளியேற முயன்றபோது தற்செயலாக கோவில் பூசாரியிடம் மாட்டிக் கொண்டான் களவாடிய பொருட்களுடனும் பணத்துடனும் அங்குள்ள பொதுமக்களின் உதவியுடன் கோவில் பூசகர் ஊர்காவற்றுறைப் பொலிசில் திருடனை ஒப்படைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்

# 'அமைச்சின் வேண்டுகோட்படி நடப்பதே புத்திசாலித்தனம்'

உடுவில், திங்கள்

"பாடசாலை ஆசிரியர்கள் சிலர் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைய நேரத்துக்குப் பாடசாலைக்குச் செல்லத் தவறிவிடுகிறார்கள், கடந்த சில தினங்களாகப் பாடசாலைகளுக்குத் திடீர் விஜயஞ்செய்த பரிசோதனைக் குழுவினர் இதனைக் கண்டுபிடித்துள்ளனர்"

மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலய ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றிய உடுவில் வட்டாரக் கல்வியதிகாரி திரு. வி. இராசநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இப்பரிசோதனைக் குழுவினர் நேரத்திற்குப் பிந்தி வரும் ஆசிரியர்களுக்கும், குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் பாடசாலையை விட்டுச் செல்லும் ஆசிரியர்களுக்கும் தகுந்த தண்டனையளித்துள்ளனர். இக்குற்றச் செயல் பற்றிய விபரம் ஆசிரியர்களின் சொந்த ஏடுகளுக்குச் செல்வதால் அவ்வாசிரியர்களுக்கு அது ஒரு தீங்காகவே அமைகிறது. எனவே அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க நடப்பதே புத்திசாலித்தனமாகும்.

## அரசினர் மரக்காலையை மூடாது தடுக்க எஸ். ஜே. வி. முயற்சி

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறை அரசினர் மரக்காலையைத் தொடர்ந்து நடத்த நடவடிக்கை எடுப்பதாக காங்கேசன்துறை எம். பி. திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் காங்கேசன்துறைப் பட்டின சபைத் தலைவர் திரு இ. குருசாமிக்கு அறிவித்துள்ளார்.

காங்கேசன்துறை அரசினர் மரக்காலை காங்கேசன்துறைப் பட்டின சபைக்கும் அருகில் உள்ள மயிலிட்டி, தெல்லிப்பளை கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம் ஆகிய கிராமங்களுக்கும் பொதுவாக அமைந்துள்ளது இங்கிருந்து மக்கள் விறகையும், வீட்டுக்கு தேவையான மரங்களையும் பெற்றுவருகின்றனர். இத்தடைசிமெந்து தொழிற்சாலை மற்றும் அரசாங்க இலாகாக்களும் தமக்கு தேவையான விறகை இந்நிலையத்தில் பெறுவதால் இந்நிலையத்தை மூடக்கூடாது என்று காணி விவசாய அமைச்சரையும் தொகுதி எம். பியையும் பட்டின சபைத் தலைவர் கேட்டிருந்தார்.

இந்தக் கடிதத்துக்கு முன் இதுபற்றி அவசரத் தந்தி ஒன்றையும் அமைச்சருக்கும் எஸ். ஜே. வி.க்கும் அனுப்பியிருந்தார்.

இதற்குப் பதில் அளித்து அனுப்பிய தந்தியிலேயே எஸ். ஜே. வி. இதுபற்றி தாம் உடன் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

வலி. வடக்கு

## ப. நோ. கூ. சங்கங்களை அரசு பொறுப்பேற்றது

மாவிட்டபுரம், திங்கள்

வலிவடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை கூட்டுறவு இலாகா நேற்று பொறுப்பேற்றது

புதிய கூட்டுறவுச்சீரமைப்புத் திட்டப்படி வலிவடக்கில் அமைக்கப்பட்ட மூன்று ஆரம்ப சங்கங்களினதும் கிளைச் சங்கங்களினதும் பொருள்களையும் இலாகா கணக்கெடுத்ததுடன் சங்கங்கள் யாவற்றையும் கூட்டுறவுப் பகுதி அதிகாரிகள் பொறுப்பேற்றனர்.

தெல்லிப்பளை, அளவெட்டி சுன்னாகம் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சங்கங்களின் கிளைகளாக சுமார் 60 சங்கங்கள் இயங்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

தெல்லிப்பளை ஆரம்ப சங்கத்தின் கீழ் மயிலிட்டி கிராமசபை, காங்கேசன்துறைப் பட்டினசபை, தெல்லிப்பளைக் கிராமசபை ஆகிய எல்லைக்குள் உள்ள சங்கங்கள் இயங்குமென்றும் அளவெட்டி சங்கத்தின் கீழ் மல்லாகம் கிராமசபைக்குட்பட்ட சங்கங்கள் இயங்குமென்றும் சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தின் கீழ் சுன்னாகம் பட்டினசபை, ஏழாலை உடுவில் கிராம சபைகள் ஆகியவற்றின் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் இயங்குமென்றும் தெரிகிறது.

### வெங்காயம் பயிரிடத் திட்டம்

கோட்டை, திங்கள்

பெருமளவில் வெங்காயம் பயிரிடும் இயக்கம் ஒன்றை காணி விவசாய அமைச்சு நாடு முழுவதிலும் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

இவ்வுற்பத்தியைப் பெருக்குவதில் மக்களுக்குவேண்டிய உதவியை அமைச்சு அளிக்கும் மேலும் இந்தியாவிலிருந்து வெங்காயத்தை இறக்குமதிசெய்வதை நிறுத்தவும் அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிய வருகிறது.

......

### 20 லட்சம் ரூபா செலவில் விவசாயப் பண்ணை

இரத்தினபுரி, திங்கள்

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள ஏரத்ன எனும் இடத்தில் இரண்டாயிரம் ஏக்கரில் விவசாயப்பண்ணை ஒன்று கூட்டுறவு முறையில் அமைக்கப்படவுள்ளது.

இருபது லட்சம் ரூபாயில் அமைக்கப்படவுள்ள இப்பண்ணையில் கோழி, கால்நடைகளும், வளர்க்கப்படுவதுடன், கோப்பி, மாமரம் மரக்கறி வகைகளும் பயிரிடப்படுமெனத் தெரியவந்துள்ளது.

— —

### பதவிஉயர்வு

குருநகர், திங்கள்

காரைநகர் சீ-நோர் அபிவிருத்தித் திட்டத்தின் குளிர்சாதன பதனிடும் பகுதி மேலதிகாரி எம். ஈ. மதி கொழும்பு சீ. எம். பி. எஸ் நிறுவனத்திற்கு பதவி உயர்வுடன் மாற்றலாகிச் செல்கின்றார்.

### மூடவேண்டாம்

குருநகர், திங்கள்

மாவட்ட வனபரிபாலன இலாகா விறகுகாலையை மூடவேண்டாமென வனபரிபாலன இலாகாவைக் கோரும் தீர்மானமொன்று காரைநகர் தெற்கு கிராம சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஆசிரியருக்கு கடிதம்

## எழுத்தாளர் கூட்டுறவு

சமீபத்தில் வெளிவந்த ஈழநாட்டில் கேரளத்து எழுத்தாளர்களின் கூட்டுறவுப் பதிப்பக முயற்சிகள் பற்றியும் அவர்கள் எவ்வளவு தூரம் ஒற்றுமையாக முன்னேறி வருகிறார்கள் என்பது பற்றியும் ஈழத்து எழுத்தாளர்கள் பலரும் புரிந்து பயனடையத்தக்க வகையில் அருமையான கட்டுரையைப் படித்தேன். தமிழ் நேசம் கரன்பிள்ளை, பொன்குன்னம் வர்க்கிபோன்ற தரமான மலையாள எழுத்தாளர்களின் அரிய இலக்கிய முயற்சிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது அதேபோன்ற கூட்டுறவு இலக்கிய முயற்சிகளும் பதிப்பகங்களும் எமது ஈழநாட்டிலும் தோன்றவேண்டும் என்பதே எமது ஆசை. முன்னர் ஒருதடவை முற்போக்கு எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம் என ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு இப்போது அது செயலிழந்து விட்டதாகவும் திரு டொமினிக்ஜீவா ஒருதடவை குறிப்பிட்டதாக ஞாபகம். எப்படியிருந்தலும் ஈழத்தில் எழுத்தாளர்களுக்கும் பயனும் நலனும் தரக்கூடிய வகையில் ஓர் எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம் கட்டாயமாக இங்கு தோன்றவேண்டும். உண்மையான 100 அல்லது 200 எழுத்தாளர்கள் உறுப்பினர்களைச் சேர்த்து மிகவும் பெரிய அமைப்பாக இந்தக் கூட்டுறவுப் பதிப்பகம் இயங்கவேண்டும். இதற்கு இன்று ஈழத்தில் இருக்கக் கூடிய சகல முன்னணி எழுத்தாளர்களும் அவர்களது நிறுவனங்களும் முயற்சிசெய்து ஆக்கபூர்வமான ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும். செய்வார்களா?

நெல்லை க. பேரன்.
வெள்ளவத்தை.

—...

### உணவுக் கட்டுப்பாடு

கோட்டை, திங்கள்

ஜூன் 3-ம் திகதி அமுலுக்கு வரவிருக்கும் உணவுக் கட்டுப்பாடுகள் சம்பந்தமான உத்தரவுகளின்படி 150 பேருக்குமேல் கூடியிருக்கும் எந்த வைபவத்திலும் உணவுவழங்கப்படக் கூடாது. இம்மாதிரி வைபவங்கள் ஒன்றுக்குமேல் நடத்தப்படவும் கூடாது. ஆனால் திருமணங்களின் போது நிச்சயதார்த்தம், திருமணம், மணமக்கள் வீடு திரும்புதல் போன்றவை வெவ்வேறாகக் கணிக்கப்படவேண்டும். மதம், தர்மம் சம்பந்தமான வைபவங்களை இந்த உத்தரவு கட்டுப்படுத்தாதென ஓர் அறிக்கை தெரிவிக்கின்றது.

—·—

### பிரியாவிடை அளித்தனர்

அரியாலை, திங்கள்

"இளைஞர்கள் கட்டாயமாக ஒரு கைத்தொழிலையாவது பயிலவேண்டும் கைத்தொழில் மூலம் நாடும் அபிவிருத்தி அடையும்" என நல்லூர் அரசினர் நெசவுப் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி மேற்பார்வையாளராகப் பதவிஉயர்வு பெற்றுச்செல்லும் திரு க. சண்முகநாதனுக்குக் கலாசாலை மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. ரி. இராஜரத்தினம் கூறினார்.

கலாசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கலாசாலை அதிபர் திருமதி கணபதிப்பிள்ளை, ஆசிரியர் திரு [illegible] மற்றும் [illegible] பேசினர்.

## 'யாழ். நகரில் நவீன நீச்சல் தடாகம் வேண்டும்'

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் ஒரு நவீன நீச்சல் தடாகம் அமைக்கப்படவேண்டுமென்பது பற்றி யாழ். மாநகர சபை ஆலோசனை செய்ய விருக்கிறது.

நீச்சல் தடாகம் அமைக்கப்படவேண்டுமென முன்னர் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தும் நீச்சல் தடாகம் அமைக்கப்படாமலிருந்தது.

நீச்சல் தடாகம் அமைக்கப்படவேண்டும் என இம்மாதம் 31 திகதி நடைபெறவிருக்கும் மாநகரசபைக் கூட்டத்தில் மீண்டும் ஒரு தீர்மானம் பற்றி ஆலோசிக்கப்படவிருக்கிறது.

திரு. என். வி. செல்லத்துரை கொண்டுவரவிருக்கும் இத்தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதாவது யாழ். மாநகர எல்லைக்குள் ஓர் நீச்சல் தடாகம் அமைக்கப்படவேண்டுமென முன்னர் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே இதுபற்றி சம்பந்தப்பட்ட அமைச்சின் முதல்வர் தொடர்பு கொண்டு நவீன நீச்சல் தடாகமொன்று அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என இச்சபை தீர்மானிக்கிறது.

பாடசாலைகள் புனரமைப்பு நிதி

## 1 நாள் சம்பளம் வழங்க வ. மா. ஆ. சங்கம் கோரிக்கை

மாவிட்டபுரம், திங்கள்

பாடசாலை புனரமைப்பு நிதிக்கு ஒருநாள் வேதனத்தை வழங்கும்படி சகல ஆசிரியர்களையும் வடமாகாண ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது. சங்க நிர்வாக சபையின் விசேஷ கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றபோது இவ்வாறு கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கலகக்காரர்களால் சேதமாக்கப்பட்ட பாடசாலைகள் புனருத்தாரண நிதிக்கு ஒருநாள் வேதனத்தை ஆசிரியர்கள் வழங்க வேண்டும். இன்று நாடு உள்ள நிலையில் ஆசிரியர்களாகிய எமது பங்கு முக்கியமானது. இந்நிதிக்கு ஆசிரியர்கள் உதவி, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவவேண்டும்' என்று தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது.

சங்கம் கலகக்காரர்களின் செயல்களையிட்டு வருத்தம் தெரிவித்துள்ளதுடன் சங்க அங்கத்தவர்களிடம் இருந்து நிதிசேகரித்து வழங்கவும் ஏற்பாடு செய்கிறது. செயலாளர் திரு. சபா நடேசன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

—

### கல்கிஸ்ஸை மேயர் காலமானார்

கோட்டை, திங்கள்

தெஹிவளை — கல்கிஸ்ஸை மாநகரசபை மேயர் ஜே. எல். வி. குணவர்த்தன இன்று காலை காலமானார் அவருக்கு வயது 78, சிறிதுகாலம்நோய்வாய்ப் பட்டிருந்த பின்னர் இவர் காலமானார். றோயல் கல்லூரி பழைய மாணவரான இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளையின் தலைவராகவும் இருந்துவந்தார்.

......

### சிரமதான மூலம் வீதி திருத்தம்

மாவிட்டபுரம், திங்கள்

மாவிட்டபுரம் மயிலிட்டி வீதியில் உள்ள பழைய வீமன் காமம் அம்மன்வீதி சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்டது.

காங்கேசன்துறைப் பட்டினசபை 3ம் வட்டாரத்தில் உள்ள மேற்படி வீதி பல காலமாக மோசமான நிலையில் இருந்ததால் இதை செப்பனிட்டு போக்குவரத்துக்கு உதவும் பொருட்டு வீமன் காமம் இளைஞர்கழகத்தின் உதவியுடன் காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டிருந்தார், இவ்வீதியின் நீளம் 1600 அடியாகும்.

இதேபோல பட்டின சபைக் குப்பட்டகறன்டன் வீதியையும் சங்கோலை வீதியையும் செப்பனிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. ஒரு வீதிக்கு கல் போட்டுத்தார் ஊற்றி செப்பனிட 4085 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

...—

### நூல்கண்காட்சி

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் பறுளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தேர்த்திருவிழாஅன்று முருகனைப் பற்றிய தமிழ்நூல்கள் கொண்ட புத்தகக் காட்சியொன்றை நடாத்த தமிழ் மன்றத்தினரால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தொகுதிக்கும்

### 2 முதல்தர தபால் கந்தோர்

கோட்டை, திங்கள்

ஒவ்வொரு தேர்தல்தொகுதிக்கும் 2 முதல்தர தபால் கந்தோர்கள் அமைத்துக் கொடுக்கப்படும் எனத் தபால்தந்தித் தொடர்பமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் தெரிவித்துள்ளார்.

இவ்விரு முதல்தர தபால் கந்தோர்களுடன் ஓர் உபதபால் கந்தோரும் அமைத்துக்கொடுக்கப்படும் என அவர் மேலும் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

—

### உருவப்படம் திறக்கப்படும்

அரியாலை திங்கள்

அச்சுவேலிக் கிராமசபைத் தலைவராக இருந்து காலமான திரு வி. சுந்தரமூர்த்தியின் உருவப்படம் அடுத்த மாதம் சபை மண்டபத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது

......

பிரச்னைகள் பற்றியாராய

### மந்திரிசபைக்கு 2 தினங்கள்

கோட்டை, திங்கள்

இம்மாதம் 28-ம், 29-ம் திகதிகள் ஆகிய இருதினங்களும் மந்திரிசபை நாட்டின் பிரச்னைகள் குறித்து ஆராய்வதற்கும் அவற்றிற்குத் தீர்வு காண்பது பற்றி ஆலோசிப்பதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பிரச்னைகள் பற்றி பூரணமகஜர் ஒன்றை தயாரித்து அவற்றிற்கான தீர்வுகளையும் கூறுமாறு ஒவ்வொரு அமைச்சருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஜீவர்களை மனம் நோகப் பேசாமலிருத்தலும், பேரன்போடுகூடிய உண்மை மொழிகளைக் கூறுதலும், வேதாகமங்களை ஓதுதலும் வாக்கினால் செய்யத் தகுந்த தவமாகும்.

—சைதை—

ஈழநாடு

Eelanadu National Tamil Daily

Telegrams; "EELANADU" Jaffna

Post Box: 49 Jaffna Telephone: 389

பிரமோதூத வருஷம் வைகாசி மாதம் 10-ந் திகதி (25-5-71)

## வெங்காயம் வழி காட்டுமாக!

இந்தியாவிலிருந்து பம்பாய் வெங்காயம் இறக்குமதி செய்வதை அரசாங்கம் முற்றாகத் தடைசெய்திருக்கிறது. பம்பாய் வெங்காயத்தின் விலையை இந்திய அரசு உயர்த்தியிருப்பதும் வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடியுமே பம்பாய் வெங்காயத்தின் இறக்குமதியைத் தடைசெய்வதென்று அரசாங்கம் தீர்மானித்ததற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. காரணம் எதுவாயினும் பம்பாய் வெங்காயம் மட்டுமல்ல இதர உணவு, உப உணவுப் பொருள்களையும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து நாட்டின் தேவையை நிறைவேற்றுவதற்கு உதவியும் ஊக்கமும் அளித்து வெளிநாடுகளை நம்பியிருக்கும் அவலநிலையை நீக்குவதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சியையும் பொது மக்களும் விவசாயிகளும் நிச்சயம் வரவேற்பர்.

பம்பாய் வெங்காயம் சின்ன வெங்காயம் மிளகாய், புளி ஆகியவைகளின் விலையை இந்தியா வேண்டும் என்றே உயர்த்தியிருப்பதாகவும் இலங்கைக்கெதிராக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின ஆத்திரத்துடன் கூறியிருப்பதாக ஓர் ஆங்கில வாரப்பத்திரிகை ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது. நாமாகத் தேடிப்போகும் எந்தப் பொருளின் விலையும் அதிகமாக இருக்குமென்பதையும் நாமாக விலைக்கு விற்க விரும்பும் எந்தப் பொருளின் விலையும் குறைவாகத்தானிருக்குமென்பதும் நன்கறிந்த சாதாரண விஷயம். எமக்கு பம்பாய் வெங்காயத்தின் தேவை அவசியமென்பதையும் நாம் எப்படியும் அதை வாங்குவோமென்றும் நம்பியிருந்தால் அதன் விலையை இந்தியா உயர்த்தியிருந்தால் அது அந்த நாட்டின் வியாபாரத்தந்திரம் அல்லது அதன் சாமர்த்தியம் என்று சொல்லவேண்டும். நமக்கு அதன் விலை ஒத்துவராவிட்டால் 'வேறு வழியைப் பார்ப்போம்; உங்கள் வெங்காயம் இந்த விலைக்கு எங்களுக்கு வேண்டாம்' என்று சொல்லி அதை இறங்கிவரச் செய்வது நமது சாமர்த்தியம்!

இலை விடுத்து இந்தியா மீது ஆத்திரப்படுவதும் பகிரங்கமாகக் குறைகூறுவதும் அயல் நாடுகளுக்கிடையில் நட்புறவு நீடிக்கவோ நிலைபெறவோ உதவமாட்டாது. இப்படி வெளிப்படையாகக் குற்றம் சொல்வது யாருக்கும் நன்மைதரவும் மாட்டாது.

உருளைக்கிழங்குக்கு வெளிநாடுகளையே எதிர்பார்த்திருந்த காலம் ஒன்றுமுண்டு. இன்று நமது நாட்டில் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இதேபோல் மற்றும் பல உப உணவுப் பொருட்களையும் அத்தியாவசியப் பொருட்களையும் சொல்லலாம்.

பம்பாய் வெங்காயமும் இங்கு உற்பத்திசெய்ய முடியாத பொருளல்ல. ஊக்கமும் உதவியும் போதிய முயற்சியும் இருந்தால் ஆகாத காரியம் எதுவுமில்லை!

சின்ன வெங்காயத்தில் நமது நாட்டின் தேவையைப் பெருமளவு பூர்த்தி செய்வது யாழ்ப்பாண மாவட்டம். பம்பாய் வெங்காயத்தைக் கூட வெங்காயச்செய்கையில் அனுபவம் நிறைந்த யாழ். மாவட்ட விவசாயிகள் உற்பத்திசெய்து நாட்டின் தேவையைப் பெருமளவில் நிறைவேற்றுவார்களென்று எதிர்பார்ப்பது தவறாகாது. இதற்கெல்லாம் அரசின் உதவியும் ஊக்கமும்தான் வேண்டும்.

சின்ன வெங்காயம் ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் பயிர்செய்யப்பட்டு குறிப்பிட்ட சில மாதங்களில்தான் அறுவடைசெய்யப்படுகிறது. இந்தவெங்காயம் முழுவதையும் அரசாங்கம் ஒரே சமயத்தில் வாங்கிப் பழுதுபடாமல் சேமித்து வைக்கக்கூடிய வசதி நமது நாட்டில் இல்லை. வெங்காயத்தை விலை பொருள் சபை மூலம் கொள்வனவுசெய்யும் கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம் அன்றாடத் தேவைக்கேற்ப இறக்குமதி செய்து விநியோகிக்கிறது. இப்போதுள்ள நிலையில் குறிப்பிட்ட சில நாட்களுக்கு அல்லது வாரங்களுக்கு வெங்காயத்தைச் சேமித்து வைப்பதற்கு விவசாயியினால்தான் முடியும்.

கொழும்பிலும் இதர பல இடங்களிலும் வெங்காயத்துக்குக் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டிருக்கிறது. வெங்காயம் அறுவடையாகும் காலங்களில் யாழ்ப்பாணத்தில் மலிவாகக் கிடைக்கும் வெங்காயத்தை கொழும்புக்குக்கொண்டுசெல்வதற்குத்தடையில்லாதிருந்தால் அங்கு கொண்டு செல்பவர்கள் கட்டுப்பாட்டு விலைக்குக் குறைவாகவே விற்கவேண்டியேற்படுமென்றும் வடபகுதியில் வெங்காயம் தட்டுப்பாடான நேரத்தில் அங்குகொண்டு சென்றாலும்கட்டுப்பாட்டு விலைக்குக்கூடுதலாக விற்க முடியாதென்றும் சிலர் விளக்கம் கொடுக்கிறார்கள்.

எனவே வெங்காயத்தை அறுவடைகாலத்தில் முழுதுமாக வாங்கிச்சேமித்து வைத்து விநியோகம்செய்வதற்கு அரசாங்கம் வசதி செய்யவேண்டும்; (2) வெங்காயத்தை வடபகுதி முழுவதிலும் உற்பத்தி செய்வதற்குஏற்ற வசதிகள் மற்றும் வசதிகள் செய்யப்படவேண்டும்! (3) வெங்காயத்தின் கட்டுப்பாட்டு விலையையும் ஆனைபிறவுத் தடையையும் நீக்கவேண்டும்; (4) வெங்காயம் அறுவடைசெய்யும் மாதங்களில் விலையைக் குறைத்தும் அறுவடையாகாத அடுத்தடுத்த மாதங்களில் அதன்விலையை அதிகரித்தும் வெங்காய உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும். (5) வெள்ளம், மழை, வறட்சி போன்ற இயற்கைக் கோளாறுகளால் பாதிக்கப்படும் வெங்காயச்செய்கையாளர்களுக்கு நஷ்டஈடு, மற்றும் பாதுகாப்பு வழங்கி உதவியளிக்க வேண்டும்.

வெளிநாடுகளை எதிர்பாராமலே நமது தேவையை நிறைவேற்ற வழியிருக்கிறது. அரசும் அமைச்சும் விவசாயிகளும் சேர்ந்த முயற்சி செய்வதில்தான் இது தங்கியிருக்கிறது. வெங்காயம் இதற்கு வழிகாட்டுமாக.

உணவருந்தும் வைபவத்தில் 150 பேர் மட்டும்:

# ஜூன் மாதம் முதல் அமுல்

## நிச்சயார்த்தம், திருமணம் தனித்தனி வைபவங்கள்

கோட்டை, திங்கள் உணவருந்தும் வைபவங்களில் 150 பேருக்கு மேல் பங்கு கொள்ள முடியாது என்ற சட்டம் ஜூன் மாதம் முதலாந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் என்று அரசாங்கம் நேற்று அறிவித்தது.

பிறநாட்டு ராஜதந்திரிகள் ஒழுங்கு செய்யும் வைபவங்கள், மதம், தர்மம் சம்பந்தமாக நடாத்தப்படும் வைபவங்கள் ஆகியனவற்றுக்கு இந்தக் கட்டுப்பாடு இருக்கமாட்டாது.

திருமண நிச்சயார்த்தம், திருமணம் சம்பந்தமான உணவருந்தும் வைபவங்களை தனித்தனிக் கொண்டாட்டங்களாக கணிக்கப்படும் என்றும் ஏனைய வைபவங்கள் சம்பந்தமாக ஒரு வைபவத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட உணவருந்தும் கொண்டாட்டங்களை நடத்த முடியாதென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஒரு வைபவம் சம்பந்தமாக ஒரே ஒரு உணவருந்தும் வைபவம் மட்டுமே நடத்த முடியும் என்று முன்னர் அரசாங்கம் அறிவித்திருந்தபோதிலும் திருமண வைபவங்கள் விடயத்தில் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

வைபவங்களின் உணவு பரிமாறும் கூலியாட்கள், வைபவ அழைப்பாளர்கள் ஆகியோர் இந்த 150 பேருடன் சேர்த்து கணக்கிடப்படமாட்டார்கள்.

## நீதிமன்றங்கள் மீண்டும் திறக்கபடுகின்றன

கேகாலை திங் கேகாலை நீதிமன்றம் மீண்டும் திறக்கப்படவிருக்கிறது. மாவட்ட நீதிமன்றம், மாஜிஸ்திரேட் நீதிமன்றவளவிற்குள் இராணுவத்தினர் தங்கியிருப்பதாக கேகாலை பகுதியிலுள்ள கொலகெல அரசினர் ஆஸ்பத்திரி வளவிற்குள் நீதிமன்றங்கள் திறக்கப்படுமென கூறப்படுகிறது.

## லாபத்தின்பின் சிறந்த சேவை

கோட்டை, திங். இலங்கை போக்குவரத்து சபையும், புகையிரத இலாகாவும் லாபத்தை பெற்ற பின் சிறந்த போக்குவரத்துச் சேவை அளிக்கப்படும் என போக்குவரத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜேம்ஸ் டீ லனரோல் நேற்று தெரிவித்தார்.

அந்த நிலைமை வரும்வரை தொடர்ந்து தற்போதைய சேவையே நீடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: பல் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து மதகுருமார்களுக்கும் இலங்கை போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கும் தற்பொழுது வழங்கப்பட்டுள்ள சலுகைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

சீசன் டிக்கட் பெறும் பாடசாலை மாணவர்களுக்கும் 50 சதவீதம் சலுகையளிக்கப்படுவதோடு 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு தொடர்ந்து அரை டிக்கட் வழங்கப்படும்.

## பாகிஸ்தானின் உதவிகள் யாவும் அன்பளிப்பு

கோட்டை, திங்கள் நாட்டில் நிலவிய குழப்ப நிலையை அடக்கி அமைதியை நிலைநாட்ட பாகிஸ்தான் கொடுத்துதவிய உதவிகள் யாவும் அன்பளிப்பென இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதர் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த மாதம் 9-ந் திகதி பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா பாகிஸ்தான் அதிபர் யாஹ்ஜாகானிடம் ஹெலிகாப்டர், ஆயுத, ராணுவ உடை உதவிகள் கோரியமையும் பாகிஸ்தான் உடனடியாக இரு ஹெலிகொப்டர்களையும் மற்றும் ஆயுத மருந்து வகைகளையும் அனுப்பி வைத்திருந்தது தெரிந்ததே.

## சிறையில் தீ பிடித்தது

கண்டி திங்கள் கண்டி போகம்பறைச் சிறைச்சாலை கன்டீனில் கடந்த இரவு தீ பிடித்தது கண்டி மாநகரசபை தீயணைக்கும் படையினர் உடனடியாகச் சென்று தீயை அணைத்தனர்.

## அமைச்சர் பாராட்டு

கோட்டை, திங் கிராம பாதுகாப்பு குழுக்களை அமைப்பதற்கு கிராம சேவகர்கள் முழு ஆதரவையும் வழங்க வேண்டும் என தொழில் மந்திரி திரு. மைக்கல் சிறிவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஏப்ரல் 5-ம் திகதி முதல் அரசாங்கத்திற்கு ஆதரவளித்து வந்த கிராம சேவகர்களை அமைச்சர் பாராட்டினார்.

பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிப்பதற்கும் குற்றச் செயல்களை முறியடிப்பதற்கும் பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் உதவி புரியவே கிராம பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் வீதி 63-ம் இலக்கத்தில் [illegible] அச்சிடப்பட்டு 1971-ம் ஆண்டு மே மாதம் 25-ம் திகதி வெளியிடப்பட்டது.

## சிறையில் இருந்த பயங்கர வாதிகள்

கண்டி, திங் கண்டி போகம்பறை சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த 237 பயங்கரவாதிகள் நேற்று வித்தியோதய பல்கலைக்கழகத்திலுள்ள புனர்வாழ்வு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

## அலுவலகக் கட்டிடம்

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ். மாநகரசபை வளவிற்குள் சுமார் 1 லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவிருந்த இரண்டாவது அலுவலகக் கட்டிட வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இக்கட்டிடம் கட்டப்படமாட்டாதென்றும் யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தெரிவித்தார்.

## தட்டுப்பாடு நீங்கியது

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாணத்தில் சீனி, மண்ணெண்ணெய்க்கு இருந்து வந்த தட்டுப்பாடு முற்றாக நீங்கியுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்த சீனியும், மண்ணெண்ணெயும் தற்பொழுது தனியார் கடைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## மீண்டும் வேலை வழங்குக

யாழ்ப்பாணம், திங்கள் 55 வயதில் இளைப்பாறுவதற்கு நோட்டீஸ் பெற்ற சகல ஆசிரியர்களுக்கும் மீண்டும் ஆசிரியர் பதவி வழங்க வேண்டும் எனக்கல்வி அமைச்சரை கோரும்தீர்மானமொன்று 55வயதில் இளைப்பாறும் ஆசிரியர் சங்க கூட்டத்தில் நிறைவேறியது.

ஏப்ரல் 29-ம் தேதிக்கு முன்னர் இளைப்பாறும் நோட்டீஸ் பெற்ற ஆசிரியர்கள் கல்வி அமைச்சருக்கு உடனடியாக விண்ணப்பிக்கும் படியும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஏப்ரல் 29-ம் தேதிக்கு பின்னர் இளைப்பாறும் நோட்டீஸ் கிடைத்தவர்களுக்கு மீண்டும் பதவி வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுவருவதை வரவேற்பதாகவும் ஏப்ரல் 29-ம் தேதிக்கு முன்னர் இளைப்பாறும் நோட்டீஸ் பெற்ற ஆசிரியர்களுக்கும் மீண்டும் வேலைவழங்குவது நியாயமானதென்றும் சங்கச் செயலாளர் திரு எஸ் செல்லத்துரை தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org